# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

சுடர் 09
விலை 20/=

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

ஐப்பசி இதழ்~2014 ,ஆரம்பம் 15மாசி~2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம்~09
E-mail- catetcota@gmail.com T.P- 026 2221022, 0263202532

"ஆண்டவரின் அடியார்களே அவரிடம் அன்பு கொள்ளுங்கள்"

## ஆயர் பேரவையின் கண்டனக் குரல்

ஈராக்கில் சிறுபான்மையினர் அதிலும் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து தாக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாய் உள்ளது. "மோசல்" பிரதேசத்தில், அதாவது பழைய, புதிய ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்ள நினிவே நகரம் கிறிஸ்தவர்களின் கொலைக்களமாகவும், பாரியளவிலான இடப் பெயர்வு இடம்பெறும் களமாகவும் மாறிவிட்டது. தங்களது வீடுகளைவிட்டு அகதிகளாக கிழக்கு ஈராக்கின் குர்டிஸ்தன் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ள கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 20 இலட்சத்திற்கும் மேற்பட்டுள்ளது. இதில் சிரியாவிலிருந்து இடம் பெயர்ந்துள்ளவர்களும் அடங்குவர். முன்னர் அங்கிருந்த 35,000 கிறிஸ்தவர்களில் தற்போது அங்கிருந்தவர்கள் சில நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ குடும்பங்களே. ஆயினும், இக்கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல்களை ISIS (ஈராக் மற்றும் சிரிய இஸ்லாமிய இராட்சிய அமைப்பு) எனும் அமைப்பே மேற்கொண்டு வருகின்றது.

கிறிஸ்தவர்கள் ஒன்றில் மதம் மாற வேண்டும் இல்லையேல் ஓடித்தப்ப வேண்டும். அல்லாது போனால் மரணத்தை எதிர்நோக்க வேண்டிவரும். இக்கட்டளையை ஏற்க மறுத்தோர் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டனர். ISIS அமைப்பானது நாட்டை சரியான நீதியின் படியிலான அடிப்படைவாத இஸ்லாமிய நாடாக மாறும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

ISIS அமைப்பின் இச்செயற்பாடுகளை சர்வதேச சமூகம் ஆணித்தரமாக கண்டித்து நீதியின் அடிப்படையில் அவர்களுக்கெதிராக தகுந்த தண்டனை வழங்கும் வண்ணம் இதைத் தட்டிக்கேட்கவும் முன்வர வேண்டும். ஈராக்கிலுள்ள கிறிஸ்தவர்களின் இந் நிலைமை மறக்கடிக்கப்படா வண்ணம், நாம் அனைவரும் செபத்தில் அவர்களோடு ஒன்றிக்க வேண்டும். இவ்வன்முறைச் சம்பவங்களின் முன் நாங்கள் ஒன்றும் தெரியாதவர்கள் போல் இருக்க முடியாது. திருத்தந்தை 1ம் பிரான்சிஸ் அவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதம செயலாளர் பன் கீ மூன் ஆகியோர் ஏற்கனவே இக் கோரச் செயற்பாடுகள் பற்றி பேசியுள்ளனர்.

விசேடமாக திருத்தந்தை 1ம் பிரான்சிஸ் அவர்கள் இது பற்றி பேசியபோது, மக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதையும், சிறுவர்கள் இக்கொடூர சம்பவத்தின் தாகத்தினாலும், பசியினாலும் இறந்து மடிந்துள்ளனர் என்றும், பெண்கள் கடத்தப்பட்டதோடு அனைத்துவிதமான வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். " இவை அனைத்தும் கடவுளையும், மனித சமூகத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது" மேலும் " பகைமையை கடவுளின் பெயரால் காட்ட முடியாது. போரும் கடவுளின் பெயரால் நடத்தப்பட முடியாது" என்று ஆணித்தரமாக கூறியுள்ளார்.

அதேவேளை, நாம் இஸ்ராயேல் மற்றும் பலஸ்தீன நாடுகளுக்கிடையில் இடம்பறும் குண்டுத் தாக்குதல்களையும் அதன் மூலம் ஏற்படும் சேதங்கள் மற்றும் பொதுமக்களின் மரணம், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் இறப்பு போன்றவை பொறுத்துக் கொள்ள முடியாத பாரிய குற்றச் செயல்கள் என்பதால் இவற்றை வன்மையாக கண்டிப்பதோடு, சர்வதேச சமூகம் இதுபற்றி விசேட கவனத்தைச் செலுத்தி மனித சமூகத்திற்கெதிரான இக்கொடுமைகளை நிறுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆயர் பேரவை தலைமைப்பீடங்கள் வலியுறுத்தி இருக்கினறன .

### "புதிய மறைபரப்பை நோக்கி" ஆசிய ஆயர் பேரவைக்கான செயலமர்விற்கு எமது ஆயர் தாய்லாந்திற்குப் பயணம்



2014 செப்ரம்பர் 25-30ம் திகதி வரை ஆசிய ஆயர் பேரவையின் கீழ் இயங்கும் பொதுநிலையினர் மற்றும் குடும்ப ஆண்டை முன்னிட்டு தாய்லாந்து பாங்கொக் நகரில் **'புதிய மறைபரப்பை நோக்கி'** எனும் தொனிப் பொருளில் சிறிய கிறீஸ்தவ குழுமங்களுக்கான செயலமர்வில் சிறப்புரையாற்ற எமது மறைமாவட்ட ஆயர் அதி.வந்.கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை மற்றும் ஆசிய நாடுகளிலிருந்தும் பல ஆயர்கள் இச்செயலமர்விற்கு கலந்து கொண்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

### அகில உலக உதைப்பந்தாட்ட 55வது சுபோட்டா (Subota) போட்டிக்கு எமது மறைமாவட்ட மாணவன் நியூடெல்லி பயணம்



எமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த தி/தூயசூசையப்பர் கல்லூரியின் மாணவனும் தூய மரியாள் பேராலயப் பங்கைச் சேர்ந்தவருமான செல்வன் அனுரா டிலுக்ஷன் பொனிபஸ் அகில உலக உதைபந்தாட்டம் **55வது சுபோட்டா (Subota)** போட்டிக்கு நியூடெல்லிக்கு பயணமாகியுள்ளார். இவருடன் 20பேர் கலந்து கொண்டுள்ளனர். இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், அநுராதபுரம், கொழும்பு, பதுளை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

## திருகோணமலை மறைமாவட்டத்தில் டொமினிக்கன் சபை அருட்சகோதரிகள் (MALTA)



## 28 வருடங்களுக்குப் பின் தூய மரியாள் பேராலயத்தில் இயேசு சபை அருட்பணியாளர் தரங்க சஞ்ஜீவ சாமிநாதன் இ.ச



20.09.2014 அன்று தூய மரியாள் பேராலயத்தில் எமது மறைமாவட்ட ஆயர் அதி.வந் கலாநிதி யோசப்கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் அருட்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். ஆயர் தனது மறையுரையில் நீண்டகால இடைவேளைக்குப் பின்பு ஒரு குரு இப்பேராலயத்தில் உருவாகியுள்ளார். எனவே இப்பங்கில், மறைமாவட்டத்தில் தேவ அழைத்தல்கள் உருவாக மன்றாடுவோம் என குறிப்பிட்டார். இவர் தனது முதல் திருப்பலியை 21. 09. 2014 அன்று காலை 6.45மணிக்கு தனது பங்கான தூய மரியாள் பேராலயத்தில் ஒப்புக்கொடுத்தார்.

இவருக்காக செபிப்போம் வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே முழு ஞானம்" (சீராக்.ஞா 19:20)

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

மீண்டும் ஒருமுறை உங்களோடு பேச எனக்கு ஒரு வாய்ப்பு.... மாதங்கள் கழிய வருடங்களும் கழிந்து கொண்டு இருக்கின்றன. மனிதரின் வாழ்க்கை முறைகளைப் பார்க்கும் போது பலதரப்பட்ட விமர்சனங்களை எதிர் நோக்க வேண்டி உள்ளது.

அரசியலை நோக்கும்போது அரசில்வாதிகள் வாக்குறுதிகளையும் செயற்பாடுகளையும் நோக்கும் போது முன்னுக்குப் பின் முரணாக இருப்பதால் பாதிக்கப்படுவது மக்களாகவே இருக்கின்றார்கள்.

ஆன்மீக நிலைகளையும் நாங்கள் உற்று நோக்கும்போது இதிலே பலருடைய பொறுப்புக்களும் கடமைகளும் நிறைந்திருப்பதை நாம் மறந்துவிட முடியாது. குறிப்பாக குடும்பங்கள் பெற்றோர்கள், ஆசிரியர், பெரியவர்கள், நண்பர்கள் என விரிந்து கொண்டு போகும். இவர்களின் பணிகளும், பொறுப்புக்களும், கடமைகளும், முழுமையாக நிறைவேறும் பட்சத்தில் ஆன்மீகத்தின் வளமான நிலைகளையும் நாம் காணமுடியும்.

நம்பிக்கை பலவீனப்படுகின்ற போது நமது சிந்தனைகளும் செயற்பாடுகளும் திசைமாறி செல்லுமென்பது உறுதியாகும்.

சமகால வாழ்க்கை நிலைகளைப் பார்க்கும் போது வன்முறைகளும் அதர்ம நிலைகளும் பெருகி வருவது வேதனைக்குரியதே உலகிலே தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தில் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். சகோதரத்தை சகோதரம் கொலைசெய்தல், தாய் பிள்ளையை கொலைசெய்தல், பிள்ளை தாயை கொலை செய்தல், கணவன் மனைவியை கொலைசெய்தல், மனைவி கணவனை கொலை செய்தல் இப்படியான நிலைகள் தோன்றுவதற்கு மனங்களிலே மனித நேயங்கள் மறைந்து அழிந்து விட்டதே காரணமெனக் கொள்ள வேண்டும்.

பெரியோர் சிறுவர் ஆசிரியர் தினம் சிறப்பிக்கப்படும் இம்மாதத்திலே உருவாக்கங்களும்: உருவாக்குதல்களும் சிறப்பு நிலைகளைக் காண வேண்டும். ஒவ்வொரு நிலைகளிலும் உள்ளவர்கள் தத்தமது கடமைகளையும்: பொறுப்புக்களையும் உணர்ந்து செயற்படும்படும் பட்சத்தில் வளமான நிலைகள் தோன்றவும் வறட்சிகள் நீங்கி வாழ்விலே வசந்தங்கள் உருவாக வழிசமைக்குமென்பது உறுதியாகும்.

எனவே நாம் ஒன்றைமட்டும் மறந்துவிடக் கூடாது நமக்கென பொறுப்புகளும், கடமைகளும் உள்ளன, அது குடும்பங்களைப் பொறுத்தமட்டில் தந்தையாக இருக்கலாம் அல்லது தாயாக இருக்கலாம் அல்லது பிள்ளையாக இருக்கலாம் அது யாராக இருந்தாலும் கடமைகள் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவது ஒவ்வொருவரின் கடமைகளாகும்.

செபமாலைப் பக்தியிலே நாம் தளர்ந்துவிடக் கூடாது குறிப்பாக குடும்ப செபமாலை செபிப்பதில் நாம் அக்கறைகாட்ட வேண்டும். செப வழிபாடுகளில் நாம் வளர்ச்சி அடைவதற்கு திருச்செபமாலைப் பக்தி முயற்சி நமக்கும், நமது குடும்பங்களுக்கும் ஒரு திடமளிக்கும் அருமருந்தாக உறுதி அளிப்பதை நாம் என்றும் மறந்துவிடாமல் குடும்ப செபமாலையில் உறுதியான, தளராத விசுவாசத்தோடு பங்கு கொள்வோம்

எனவே எந்த நிலைகளில் இருந்தாலும் நமது நிலைகளை உணர்வோம். நமது கடமைகளைச் செய்வோம். அதுவே நமது வாழ்வின் வெற்றியெனக் கொள்வோம். எனக் கூறிக்கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக்கூறி நிற்கின்றேன்.



# இறந்த பின்னர் மீண்டும் உயிர்பெற்ற அருட்தந்தை

இறந்துபோன எனக்கு மீண்டும் உயிரளித்து, என்னை மீண்டும் இவ்வுலகிற்கு அனுப்பிய ஆண்டவர் எனக்கு குணமளிப்பார் என நான் உறுதியாக நம்பிக்கை கொண்டேன். வீட்டிற்கு என்னைக் கொண்டுவந்த பின்னர் அனைவரும் எனக்காக " ஒரு புதுமை வேண்டி செபித்தார்கள். ஒரு மாதத்தின் பின்னர் எனக்கு போட்டிருந்த பிளாஸ்திரியை (Plaster) வெட்டினார்கள். ஆயினும் என்னால் திரும்பக்கூட முடியவில்லை. நாட்கள் சில சென்ற பின் ஒரு நாள் நான் செபித்துக்கொண்டிருந்தபோது இடுப்புப் பகுதியில் அதிக வலி உண்டானது. சில நேரத்தின்பின் அந்த வலி முற்றாக இல்லாமற் போனதோடு எனக்கு ஒரு குரல் கேட்டது. "நீர் இப்போது நலம் பெற்றுவிட்டீர்" எழுந்து நடந்து செல்லும்".

எனது உடல் முழுவதிலும் ஒரு ஆறுதலான, மென்மையான உடல் நலத்தை உணர்ந்தேன். அவ்வேளையிலிருந்து எனக்கு எழும்பவும் நடக்கவும் இயலுமாயிருந்தது. நான் இடைவிடாது உரத்த குரலில் இறைவனுக்கு நன்றி, புகழ்ச்சி கூறத் தொடங்கினேன். நான் புதுமையாக நலம் பெற்றதைக் கண்ணுற்ற வைத்தியர் அதிக ஆச்சரியமடைந்தார். அவர் எனக்கு இவ்வாறு கூறினார். "உங்களின் இறைவன் தான் உண்மையான இறைவன். நானும் இனிமேல் உங்களின் இறைவனையே பின்பற்றுவேன்". பிறப்பிலேயே இந்து பக்தரான அவர் எனது இறைவனைப் பற்றி என்னிடம் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். இறை நம்பிக்கையை நன்கு கற்றுக் கொண்ட அவர் எனது கையாலேயே திருமுழுக்கு பெற்றார். இன்று அவர் ஒரு பக்தி நிறைந்த கத்தோலிக்கர். எனது காவல் தூதரின் வழிகாட்டுதலின்படி நான் 1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் அமெரிக்காவுக்கு வந்தேன். 1987-1989வரை ஐடஹோகி பொயிஸ் மறைமாவட்டத்திலும், 1989-1992வரை புளோரிடா நகரில் ஒலென்டே சிறைச்சாலையின் இயக்குனராகவும் நியமனம் பெற்றேன். அமெரிக்காவின் பல இடங்களிலும் பணியாற்றிக்கொண்டிருந்த நான் 2011 ஆடி 1ம் திகதி ஒரேன் பாக்ஹி சியனாகியிலுள்ள தூய கத்தரினா ஆலயத்தில் பணியாற்றுவதற்கு வந்தேன். இன்று நான் இந்த மறைக்கோட்டத்தில் மரியாயின் சேனை இயக்குனராக இறை பணியாற்றுகிறேன்.

மாதத்தின் முதல் சனிக்கிழமைகளில் குணமளிக்கும் வழிபாடு நடைபெறுகிறது. தெய்வீக நலனைப் பெற்றுக் கொள்வதற்காக அமெரிக்காவின் பல பிரதேசங்களிலிருந்தும் மக்கள் வருகிறார்கள். வொஷிங்டன், டலஸ், சிகாகோ, டென்வர், ஹவாய், மியாம், புளோரிடா ஆகிய பிராந்தியங்களிலிருந்து குணமளிக்கும் வழிபாட்டிற்காக எனக்கு அழைப்புக்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவ்வாறே நான் அயர்லாந்து, ஸ்பானியா, ச்செக் ஐக்கிய இராச்சியம், இந்தியா, பிரான்ஸ், போர்த்துக்கல், யுகொஸ்லேவியா, மெக்சிகோ, கேமன் தீவுகள் ஆகிய இடங்களிலெல்லாம் குணமளிக்கும் வழிபாடு நடாத்தி உள்ளேன். இந்த வழிபாடுகளில் தேவநற்கருணையின் மத்தியஸ்தத்தினால் உடல், உள, ஆன்மீக நோயாளர்கள் சுகம் பெற்றுள்ளார்கள். அவ்வாறே புற்று நோயாளர், எயிட்ஸ் நோயாளர், ஆத்தரைட்டிஸ், இருதய நோயாளர், கண் நோயாளர், இளைப்பு நோயாளர், முதுகெலும்பு நோய், காதுகேளாதோர் ஆகிய பல்வித நோயாளர்கள் நலம் பெற்றுள்ளனர்.


அவ்வாறே எனது இந்த குணமளிக்கும் வழிபாட்டில் மேலுமொரு பிரிவு (நோய்) யாதெனில் குடும்ப மரத்தில், பரம்பரையாக வரும் நோயாகும்.- இறைவார்த்தையின் படி "ஆரம்ப பரம்பரையினரால் செய்த பாவம் மூன்று அல்லது நான்கு தலைமுறையினரை பாதிப்பதாக கூறுகிறார்கள். பரம்பரையாக வருகின்ற இத்தகைய பாரம்பரிய நோயை" வைத்தியராலேயோ இன்றைய வைத்திய விஞ்ஞானத்தினாலேயோ சுகப்படுத்த முடியவில்லை. எமது நீண்ட குணமளிக்கும் வழிபாட்டின் மூலம் இத்தகைய நோயாளரைக் குணப்படுத்துகின்றோம். **(genertioil healing).** இந்த குணமளிக்கும் வழிபாட்டின்போது பலர் தேவநற்கருணை முன்னிலையில் தூய ஆவியின் ஆசீரைப் பெற்றுக் கொள்கிறார்கள். அத்துடன் அவர்களின் ஆன்மா தூய்மையாக்கப்பட்டு உடல் நலம் பெறுகிறது.


இறந்த பின்னர் மீண்டும் உயிர் பெற்று தற்போது நோயாளரை சுகப்படுத்துகின்ற அருட்பணி ஜோசே அடிகளாரின் உண்மைக் கதையை வாசித்தோம். இவர் சென்ற வருடம் ஆவணி 22ம் திகதி இலங்கைக்கு வந்து பொரளை, சகல புனிதர்களின் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

**பின்குறிப்பு** : இன்றைய வைத்திய விஞ்ஞானம் கண்டு கொள்ளாத இத்தகைய அனுபவம் "ரேமன்" என்ற அறிஞரால், **"The life after death"** (மரணத்தின் பின் வாழ்வு) என்ற நூலில் பரிசோதனையுடன் முன் வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே **"Near death experience"** என்ற பிரசித்திபெற்ற நூலில் இன்றைய "வளர்ச்சி பெற்றுள்ள விஞ்ஞானத்தையும் கடந்த அனுபவம் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. அத்தகைய எல்லா அனுபவங்களிலும் பொதுவான இயல்பு:- வைத்திய பரிசோதனையின்படி இறந்தார் என வெளிப்படுத்துதலும், உடலிலிருந்து வெளியேறும் ஆன்மா சுரங்க பாதை வழியாக சென்று மிகவும் அழகாக மின்னுகின்ற ஒளியிடம் வருவதாகவும் அங்கு மிகவும் இரக்கத்துடன் கூடிய குரல் (இயேசுவின்) அந்த ஆன்மாக்களுடன் கதைப்பதாகவும் இறந்த உறவினரை அங்கே சந்திப்பதாகவும் - ஆயினும் மீண்டும் இவ்வுலகிற்கு வர நேர்ந்ததாகவும், அங்கே இறந்த உடலுக்குள் உட்புகும் போது அதிக வலி (வேதனை) ஏற்படுகிறது என்பனவுமாகும். முற்றும்.......

**அருட்சகோதரி ரஞ்சி போல்துரை,**
**தேசிய மறைக்கல்வி நடுநிலையம் , கொழும்பு**

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகள் கையளிக்கும் நிகழ்வு.





சுவிஸ் கரித்தாசின் நிதி உதவியுடனும் எமது தேசிய நிறுவனத்தின் அனுசரணையுடனும் சுனாமியாலும், போரினாலும் பாதிக்கப்பட்ட மூதூர், வட்டம் கிராமத்தைச் சேர்ந்த 14 பயனாளிகளுக்கு தலா 580,000.00 பெறுமதியான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு கடந்த 2014. 09. 11ஆம் திகதியன்று வீடுகள் கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக திரு.பிரதீபன் பிரதேச செயலாளர், மூதூர், திருமதி. றெஜீனாவெங் சுவிஸ் கரித்தாஸ் பிரதிநிதியும், திரு. அன்டனி யேசுதாசன் தேசிய நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர், அருட்பணி க.நிதிதாசன் இயக்குனர், எகெட் கரித்தாஸ், மற்றும் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தார்கள். வீடுகளைப் பெற்றுக் கொண்ட மக்கள் தங்களது மகிழ்ச்சியையும், மனமார்ந்த நன்றிகளையும் எகெட் கரித்தாஸ் வலையமைப்பிற்குத் தெரிவித்துக் கொண்டனர்.

**எகெட் கரித்தாஸ்**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மலரட்டும்

அருட்பணி N.C அருள்வரதன்

➤ மனிதங்கள்
மறைகின்றதே
மனித நேயங்கள்
குலைகின்றதே
அதர்மங்கள் சிரித்து
கொக்கரிக்க
தர்மங்கள் அமைதியாய்
அழுகின்றதே

➤ கொலை வெறியும்
கொடுமைகளும்
கோபுரமாய் எழுந்துயர
படுந்துயர
நிலைகளினால்
பதைபதைக்கும்
மனங்களுமாய்
அழுதுவிடும் கண்ணீர்கள்
ஆறெனவே பாய்ந்திடுமே

➤ அமைதியின்
நிலைகளவை
அழிந்துவிடும்
காலமிதாய்
வன்முறையின்
வடிவங்கள்
வந்து அவை
தொடர்ந்து வர
அன்பின் விளைவுகளை
அறிவதுதான் எப்படியோ.

➤ வெடிகளென
பாய்ந்துவரும்
வார்த்தைகளும்
வார்த்தைகளால்
நொறுங்கிவிடும் மனங்களுமாய்
சீர்குலையும்
வாழ்வினையே காணும்போது
சோர்ந்துவிடும் வாழ்வினையே
என்ன செய்வோம்

➤ மனிதரை மனிதர்
சாடித் தூற்றுதல்
மதங்களை மதங்கள்
மதியாது தாக்குதல் இந்த
தீங்குகள் நிறைந்தே
தொடர்வதனால்
தாங்காது மனங்களும்
வாடிடுமே

➤ இறைவன் படைத்தார்
உன்னதமாய்
ஏனோதான் மனிதரிடை
பேதங்களோ
வேண்டவே வேண்டாம்
வேற்றுமைகளவை
வேரழிந்த மரங்களாக
சரிய வேண்டுமே

➤ நேரிய நல்
வழிகளைப்பற்றியே
உண்மை வழி
அதுவென உணர்ந்து
ஒற்றுமையின்
நிலைகளினால்
ஓங்கும் போது
குறைகளவை
தோன்றிட
இடமின்றி மறைந்திடுமே

**சிந்திக்க....**

தத்தக்க புத்தக்க நாலு கால்
**(குழந்தைப் பருவம்)**
தானே நடக்கையிலே இரண்டு கால்
**( இளமைப் பருவம்)**
முற்றிப் பழுக்கையிலே மூன்று கால்
**( முதிர்ந்த பருவம்)**
எல்லோரும் போகையிலே எட்டு கால்
**(இறந்தபின் தூக்கிச் செல்பவர்கள் நான்கு பேருக்கும் எட்டு கால்)**

## நாம் சிந்திக்க



**சிரோமி** :- ரம்யா, அதுகள் T.V யே தஞ்சம் என்று இருக்குதுகள் நீயாவது கொஞ்சம் பைபிளை வாசியன் சத்தமா வாசித்தா தான் நானும் கேப்பன்.

**ரம்யா** :- ஐயோ அம்மா எனக்கு இப்ப நேரமில்லை பிறகு பார்ப்பம் இப்போதைக்கு பைபிளை முத்தமிட்டு வைக்றேன் சரியோ

**சிரோமி** :- வாசி என்று சொல்ற நேரமெல்லாம் முத்தம் தான் கொடுக்கிறா, இது யூதாசின் பக்தி முயற்சிபோல யார்தான் வார்த்தையின் வல்லமையை உணர்றாங்க..

திருமதி மதுராகெனடி
பேராலயம்

## தாயின் அன்பு

● கவிகளில் வடிக்க
வார்த்தை வரவில்லை!
கண்களில் வடிக்க
கண்ணீரும் வரவில்லை!

● கடலிலே கப்பல்
சென்றதை கண்ட
கண்களால் கப்பலில்
சென்றோரை
காணமுடியவில்லை!

● கவிவடிக்கவென பேனையை
கையிலெடுத்தேன்
என் பேனையே
கண்ணீர் வடிக்கிறது.

● இப்படியிருக்க கவிகளில்
எப்படி கூறுவேன்
தாயின் அளவில்லா
அன்பிற்கு ஆறுதல்

● பெற்றெடுத்த பிள்ளைகளை
கண்பாராத் துயரால்
பேதைகளாய் போகும்
பெற்றோரின் மனம்



இருதயநாதன் மேரிஅனிஸ்டா
செல்வநாயகபுரம்

## வார்த்தை

✶ குழந்தைகளது ஆரம்ப வார்த்தை - **மழலை**
✶ இளைஞன் யுவதி பகிரும் வார்த்தை - **காதல் வார்த்தை**
✶ கணவன் மனைவிக்குமிடையில் உள்ள வார்த்தை - **அன்பு வார்த்தை**
✶ கோபத்தின் பயனாய்க் காட்டப்படும் வார்த்தை - **ஆத்திர வார்த்தை**
✶ பிடிபட்ட கள்வன் தான் தப்புவதற்காக பாவிக்கும் வார்த்தை - **பொய்யான வார்த்தை**
✶ ஆசிரியர் மாணவர்க்கு கூறும் வார்த்தை - **அறிவுரை வார்த்தை**
✶ நீதிபதி நீதிமன்றங்களில் கூறும் வார்த்தை - **நீதி வார்த்தை தீர்ப்பு**
✶ இருநாடுகளுக்கிடையேயுள்ள பிணக்குகளைத் தீர்ப்பதற்கு இன்னொரு நாடு தலையிட்டுப் பேசும் வார்த்தை - **சமாதானப் பேச்சு வார்த்தை**
✶ மதத்தலைவர் மக்களுக்குப் புகட்டும் வார்த்தை - **போதனை வார்த்தை**
✶ திருமண இரு வீட்டாருக்கிடையில் ஏற்படும் வார்த்தை - **திருமணப்பேச்சு வார்த்தை**
✶ மந்திரவாதிகள் கூறும் வார்த்தை - **மந்திர வார்த்தை**
✶ கபிரியேல் தூதர் தேவமாதாவுக்கு கூறியது - **மங்கள வார்த்தை**

ச.அந்தோனிப்பிள்ளை
அ.இ. சமாதான நீதிவான்

## குட்டிக் கதை

Fr.N.C

ஒருவாரத்திற்கு முன் திருமணம் செய்து கொண்ட இளந்தம்பதிகள் பஸ்ஸிலே பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். பயணத்தின் போது திடீரென்று "ரிக்கட் பரிசோதகர்" பஸ்ஸில் ஏறி ரிக்கட்களை பரீட்சிக்கும் போது புதுத் தம்பதிகளிடம் வருகின்றார். ஒரு ரிக்கட்தான் எடுத்திருந்தார்கள் பரிசோதகர் கேட்கிறார் ஏன் ஒரு "ரிக்கட்" என்று அதற்கு கணவன் கூறுகிறார். எங்கட திருமணத்தில எங்கட பங்குத் தந்தை சொன்னவர் "நீங்கள் இருவரல்ல ஒருவர்" என்று அதுதான் ஒரு "ரிக்கட்" எடுத்தனான்

யோசித்தீர்களா சிந்தனை இது...

## சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு



"Old is gold" முதுமை பெறுமதிமிக்கது, எனக் கூறுவர். பழுத்த ஓலை விழ குருத்தோலை நகைப்பது போல் தற்காலத்து இளம் வயதினர் முதியோரது அருமை பெருமைகள் அறியாதவர்களாக அவர்களது வார்த்தைகளை பொருட்படுத்தாமல் எல்லாம் எமக்குத் தெரியும் என எண்ணி அவர்களது மனதை புண்படுத்துகிறார்கள். முதியோரது அறிவுரைகளை ஏற்பதில் அவர்களுக்கு இழிவு என எண்ணுகிறார்களோ என்னமோ...... தாங்கள் கூறும் வார்த்தைகளை அனைவரும் ஏற்க வேண்டும் என்பதே அவர்களது நோக்கம்.

முதியவர்கள் சகல விடயங்களிலும் தம்முடைய பூரண அனுபவம் , அறிவைப் பயன்படுத்தி இளைஞர்களுக்கு அறிவைப் புகட்டுகின்றனர், சிலர் அவற்றைக் கேட்பர் அனேகர் அதனை பொருட்படுத்தாமல் சென்றுவிடுவர் முன்னர் சிறுவர்களுக்கோ பெரியவர்களுக்கோ ஏதேனும் வருத்தங்கள் ஏற்பட்டால் முதலில் வயதான பெரியோரிடமே அபிப்பிராயம் கேட்பார்கள் அதற்கேற்ப அவர்கள் கூறும் மருந்துகளை பயன்படுத்தி அவற்றின் மூலம் சுகப்பட்டோர் பலர். ஆனால் தற்போது சிறு காயங்கள் என்றால்கூட முதியவர்களின் ஆலோசனைகளைப் பொருட்படுத்தாமல் பிரத்தியேக வைத்தியசாலைக்கு பணத்தைச் செலவழிக்கின்றனர்.

தற்போது முதியோர் மட்டில் அரசாங்கமானது சிறிது அக்கறை எடுத்து அவர்களுக்காக அடையாள அட்டைகளை வழங்கியும் வசதியற்ற 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மாதாந்தம் ரூபா 1000.00 கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் முதியோர்களையே முக்கியத்துவப்படுத்துகின்றனர். அவர்களுக்கு அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்தும் பணம் வழங்கியும் கௌரவப்படுத்துகின்றனர். அத்தோடு மட்டுமல்லாமல் போக்குவரத்திலிருந்து சகல விடயங்களுக்காகவும் அவர்களையே முதன்மைப்படுத்துகின்றனர். இம் முதியோரை நினைவுபடுத்த ஒக்டோபர் 1ம் திகதியை சிறுவர் தினம் மட்டுமல்லாமல் சர்வதேச முதியோர் தினமாகவும் பிரகடனப் படுத்தியுள்ளனர்.

எத்தனை மக்கள் வயதானவர்களை வீட்டில் வைத்து பராமரிக்க இயலாமல் அவர்களது அருமை தெரியாதவர்களாய் வீட்டில் ஒதுக்குப்புறத்தில் வைத்துள்ளனர். வெளியார் பார்த்தால் வெட்கம் கௌரவக்குறைவு என எண்ணுகிறார்கள். மேலும் இவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்துவிடுகின்றனர். அங்குள்ள முதியவர்கள் மன ஏக்கத்துடன் தம் பிள்ளைகள் பற்றிய சிந்தனையில் தம் மிகுதிக் காலத்தைக் கழிக்கின்றார்கள்.

அவர்கள் தம் முதிர்ந்த வயதில் எதிர்பார்ப்பது பாசம். அன்பை மட்டும் ஆகும். ஆனால் தற்போது முதியோரைக் கவனிக்காது புறந்தள்ளும் பிள்ளைகளே அனேகமாக உள்ளனர். நாளை இவர்களுக்கும் இது போன்ற நிலை வராது என என்ன நிச்சயம்.

அன்பு நெஞ்சங்களே முதியோருடன் அன்பாகப் பழகுங்கள் இயலுமான உதவிகளைப் புரியுங்கள். அவர்களது மனதைப் புண்படுத்தாதீர்கள் ஒதுக்கி தனிமைப்படுத்தாதீர்கள். அவர்கள் வீடுகளில் இருப்பது வீட்டிற்கு மட்டுமல்லாது உங்கள் குடும்பத்திற்கும் பாதுகாப்பு அவர்களைக் கௌரவப்படுத்திக் கொள்ளுங்கள் எனக் கூறிக் கொள்ளும் உங்கள்.

ச. அந்தோனிப்பிள்ளை
அ.இ. சமாதான நீதவான்

**வாசகர்களே!**

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்பார்க்கின்றோம். அவற்றை **திருமலைத் தீபத்திற்கு** அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :-**

**ஆசிரியர்**
**திருமலைத் தீபம்**
**297, டொக்கியார் வீதி,**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தித்திக்கும் திருப்பாக்கள்"

## திருப்பாடல் – 03

அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட்

நம்பிக்கை மிக்க காலை மன்றாட்டு

**1-2: நிகழ்காலத்தில் எதிரிகள் தாக்கல்**

1 ஆண்டவரே, என் எதிரிகள் எவ்வளவாய்ப் பெருகிவிட்டனர்! என்னை எதிர்த்து எழுவோர் எத்தனை மிகுந்து விட்டனர்!
2 'கடவுள் அவனை விடுவிக்கமாட்டார்' என்று என்னைக் குறித்துச் சொல்வோர் பலர். (சேலா)

**3-4: கடந்த கால இறையுதவியை நினைவு கூறல்**

3 ஆயினும், ஆண்டவரே, நீரே என்னைக் காக்கும் கேடயம்; நீரே என் மாட்சி; என்னைத் தலைநிமிரச் செய்பவரும் நீரே.
4 நான் உரத்த குரலில் ஆண்டவரிடம் மன்றாடுகின்றேன்; அவர் தமது திருமலையிலிருந்து எனக்குப் பதிலளிப்பார். (சேலா)

**5-6: எனவே, உதவி கிட்டும் என்ற நம்பிக்கை**

5 நான் படுத்துறங்கி விழித்தெழுவேன்: ஏனெனில், ஆண்டவரே எனக்கு ஆதரவு.
6 என்னைச் சூழ்ந்திருக்கும் பல்லாயிரம் பகைவருக்கு நான் அஞ்சமாட்டேன்.

**7-8: அவ்வுதவிக்காக மன்றாடல்**

7 ஆண்டவரே, எழுந்தருளும்; என் கடவுளே, என்னை மீட்டருளும்; என் எதிரிகள் அனைவரையும் கன்னத்தில் அறையும்! பொல்லாரின் பல்லை உடையும்!
8 விடுதலை அளிப்பவர் ஆண்டவர்; அவர்தம் மக்களுக்கு ஆசி வழங்குவாராக! (சேலா)

**பொருள் விளங்க**

அப்சலோமின் படைகள் தம்மை எதிர்த்து நின்றபோது **(2சாமு15-19)** தாவீது பாடியதாகக் கூறப்படும் இத்திருப்பா இறைவன் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. **'ஆண்டவர்'** என்ற சொல் மீண்டும் மீண்டும் வருவது **(ஆறு தடவை)** இந்த நம்பிக்கையின் வெளிப்பாடே. 'அஞ்சாதே. நான் உனக்குக் கேடயமாக இருப்பேன்' **(தொ.நூ.15:1)** என்று இறைவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதி இங்கு நினைவு கூரப்படுகின்றது. வாக்கு மாறாத தெய்வம் என்னைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை வலுப்படுத்தப்படுகின்றது. **'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'** என்பதே இப்பாடலின் மையக் கருத்தாகும்.

கெத்சமெனித் தோட்டத்தில் துயரமும் மனக்கலக்கமும் நிறைந்தவராய், தனக்கு நிகழப்போகின்ற பாடுகளைப் பற்றி நினைத்து நான் வேதனைப்பட்டாலும் தந்தை இறைவன் என்னை மாட்சிப்படுத்துவார் **(காண்: மத். 26: 36 - 42)** என்ற நம்பிக்கையின் முன்னோடியாக இது தெரிகின்றது.

நாமும் **உலகிலே, நாட்டிலே, ஊரிலே, குடும்பத்திலே, தனிமனிதர் வாழ்விலே துன்பம், துயரம், பாவம், தீமை, அநீதி, பஞ்சம், பட்டினி, நோய், சாவு** என்று பல ஆயிரம் பகைவர்களுக்கு மத்தியில் வாழுகின்றோம். இச்சூழ்நிலைகளில் எல்லாம் இறைவன் என்னைக் காப்பார் என்ற நம்பிக்கையை வலுப்படுத்த இத்திருப்பாவை காலை மன்றாட்டாகப் பயன்படுத்தலாம். மேலும் இத்திருப்பா நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கும் போது எங்கள் செபங்களில் இருக்க வேண்டிய முக்கியமான ஒரு பண்பு அங்கு காணக்கிடக்கின்றது. நிகழ்காலத்தில் துன்ப துயரத்தால் வாடுகின்ற போது, கடந்த காலத்தில் இறைவன் செய்த உதவிகளை மறக்காமல் அதற்கு நன்றி கூறுவது 'அன்று உதவிய தெய்வம் இன்றும் உதவுவார்' என்ற நம்பிக்கையை வலுப்படுத்த உதவும். எனவே எமது செபங்கள் இறைவன் செய்த உதவிகளுக்கு நன்றிகூறுதலாக அமைந்து அவர் கரங்களில் நம்மை ஒப்படைத்து அமைதியோடு, ஆறுதலோடு நான் படுத்துறங்கி விழித்தெழுவேன் **(காண்: 5வசனம்)** என்று சொல்கின்ற மனப்பான்மையை எங்களில் உருவாக்கும்.


**நினைவில் நிறுத்த...**

**'ஆண்டவரே, எழுந்தருளும்; என்னை மீட்டருளும்' (7)**

**'விடுதலை அளிப்பவர் ஆண்டவர்' (8)**

**(நன்றி: ஆர். சே. இராசா. யே.ச.)**

## குடும்ப ஆன்மீகம்



**திருவிவிலியப் பார்வையில் திருமணத்தின் ஆரம்பம்**

எம் முன்னோர் திருமணத்தை **"சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது"** என்றனர். கவிஞன் ஒருவன் திருமணத்தை இன்னார்க்கு **"இன்னாரென்று எழுதி வைத்தானே தேவன் அன்று"** என்று பாடினான். ஓர் ஆணும் பெண்ணும் அன்பால் கட்டப்பட்டு கணவன் மனைவியாக இணைக்கப்படுவதே குடும்பம் என்பது பொது நியதி. இது இவ்வாறிருக்க கிறீஸ்தவ திருமணம் என்பது மெய்விவாகம் என்னும் அருட்சாதனத்தால் இணைக்கப்படும் இரு உள்ளங்களின் இணைபிரியா சங்கமம். உலகப் படைப்புக்களைப் படைத்த இறைவன் அவற்றை நல்லதெனக் கண்டார். மனிதனையோ தம் உருவிலும் சாயலிலும் படைத்தார். **(தொ.நூ 1:26)** எனப் படைப்பு வரலாறு கூறுகின்றது. மனிதனைப்படைத்த இறைவனுக்கோ திருப்தியில்லை காரணம் அவன் தனித்திருந்தான் எனவே அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார். **(தொ.நூ 2:18)** இதுவே திருமணத்தின் ஆரம்பம் தகுந்த துணையையோ அவர் மனிதனின் விலாவிலிருந்தே உருவாக்கினார்.**(தொ.நூ 2:21-22)** எனவே இருவரும் ஒரே உடலாயிருப்பர். **(தொ.நூ 2:24)** இதுவே குடும்ப ஆன்மீகத்தின் அடித்தளம் இதையே புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவும் மேற்கோள் காட்டி கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்றும் வலியுறுத்தினார். **(மத் 19:4-6, மாற்கு 10:5-9)** எனவே கடவுளால் உருவாக்கப்பட்ட தகுந்த துணையே தனது கணவன்/மனைவி என்பதை தம்பதியர் ஏற்று வாழ்ந்து இல்லறத்தை இறைதிட்டப்படி நல்லறமாக்க முன்வருவோம்.

திரு திருமதி ஜேம்ஸ் ய. லெப்பன்
பாலையூற்று, அன்புவழிபுரம்
மறைமாவட்ட குடும்ப வாழ்வுப்பணி

## சிறகை விரிப்பாய் இன்னும் சிறப்பாய்

இரவு வானை அண்ணாந்து பார்த்திருக்கிறீர்களா? ஒரே நேர் கோட்டில் வரிசை பிடித்துக் கொண்டு நிற்கும் அந்த மூன்று நட்சத்திரங்கள் நிச்சயம் உங்கள் கண்களில் பட்டிருக்கும் அந்த நட்சத்திரங்கள் சொல்வது இதுதான். நன்றிகள், வாழ்த்துக்கள், பாராட்டுக்கள். எது நடந்தாலும் நன்றி சொல்லுங்கள் என்கிறது பைபிள். நல்லது நடந்தால் நன்றி சொல்லலாம் அதுவே மாறிப் போனால் எப்படி நன்றி சொல்வது? "எந்தத் தீமைக்குள்ளும் ஒரு நன்மை உண்டு". என்ற பாடல் வரிகளைக் கொஞ்சம் பாடிப் பாருங்கள். இப்போது தானாகவே நன்றி செலுத்தத் தோணும். உங்களை விட வயதில் மூத்தவர்கள், சிறியவர்கள், பணம், அந்தஸ்து, சூழ்நிலை, சந்தர்ப்பம், எப்போதும் யாரிடமும் நன்றி என்ற வார்த்தையை சொல்லத் தயங்காதீர்கள்.

**இங்கே ஒரு கதை:-** ஒரு பெரியவரின் குதிரையை ஒருவர் விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். பெரியவர் அவரிடம் குதிரை ஓடுவதற்கு **Thank God** என்று சொல்ல வேண்டும் **God bless me** என்றால் நிற்கும் என்று சொல்லியிருந்தார். அந்த மனிதன் மலைப்பாதைக்கு வந்தான். ஏற முடியாமல் பனி மூட்டமாக இருந்தது, என்ன செய்வது? என்று யோசித்தான். சற்று நேரத்தில் பனி விலகி வழி தெரிந்தது **Thank God** என்றான் குதிரை ஓடத் தொடங்கியது. அவன் செல்ல வேண்டிய இடம் தாண்டியும் குதிரை ஓடிக் கொண்டேயிருந்தது. நிறுத்துவதற்கு என்ன சொல்வது என்று பெரியவர் சொல்லிக் கொடுத்தாரே அது என்ன வார்த்தை என்று யோசித்துப் பார்க்கிறான். குதிரையின் தறிகெட்ட ஓட்டத்தில் ஞாபகத்திற்கு வருவேனா என்கிறது, பயத்தில் கண்களை இறுக்க மூடிக்கொண்டான்.

இலேசாகத் திறந்த போது எதிரே பெரிய பள்ளத்தாக்கை நோக்கி அவனைக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறது குதிரை. கடைசியாய் கடவுளைத்தான் நினைத்துக் கொள்ள வேண்டும் என்று புஜன டிடநளள அந என்றான். குதிரை நின்று விட்டது. கடவுள் எத்தனை அருமையானவர். ஒரு சின்ன வார்த்தையை ஞாபகம் வைத்திருக்காதவன் அவரை ஞாபகம் வைத்திருக்கிறேன் என்று அகமகிழ்ந்து என்னைக் காப்பாற்றி விட்டார். குதிரையை நிறுத்தி விட்டார். இல்லையென்றால் இந்தப் பள்ளத்தாக்கில் விழுந்து இந்நேரம் piece....piece ஆகியிருப்பேன். ஆகவே கடவுளுக்கு நன்றி சொல்லுவோம் என்று எண்ணி Thank God என்றான். குதிரை என்ன செய்திருக்கும்? (கதை எப்படி)

ஒவ்வொரு வேளை உணவையும் தாமே தேடிக் கொண்டாலும், சமைத்துக் கொண்டாலும் அதை நமக்குக் கொடுத்ததற்காக கடவுளுக்குநன்றி சொல்கிறோமே அது எத்தனை அர்த்தபூர்வமானது. ஓப்புக்குச் சொல்லாமல் உணர்ந்து சொல்லுங்கள். முதல் சயமெ பெறும் மாணவனுக்கு மட்டும் தான் பாராட்டு என்றால் மற்ற மாணவர்கள் முன்னே வர வழியே பிறக்காது. ஒவ்வொருவரும் ஏதோ ஒரு திறமையுடன் படைக்கப்பட்டு இருக்கிறார்கள். சிலரிடம் அந்தத் திறமை வெளிப்பட சரியான சந்தர்ப்பம் அமையவில்லை என்றுதான் சொல்ல வேண்டுமேயன்றி அவர்களிடம் திறமையே இல்லை என்று ஒதுக்கி விட முடியாது.

எல்லோருக்கும் ஒரு பழக்கம் உண்டு. அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுக்கு அனைவருமே மாறி மாறி அங்கீகரித்துப் பாராட்டுவார்கள். அதற்கு அடுத்தபடியில் உள்ள நபர்களைக் கூட கண்டு கொள்ளாமல் ஒதுக்கிடுவார்கள். ஒருமுறை தூக்கி வைத்துக் கொண்டாடப்பட்ட நபர் மறுமுறை மங்கிப் போய் விடுவார். யாருமே பாராட்டவில்லை என்று முகம்தொங்கிப் போய்விடுவார். பாராட்டில் பாரபட்சம் வேண்டாம், எல்லோரையும் எப்போதும் பாராட்டுங்கள். சுற்றுச் சூழலையும், தட்ப வெப்ப நிலையையும் கூட பாராட்டி நமக்கு சாதகமானதாக்கி கொள்ள வேண்டும். Good morning தொடங்கி ஒவ்வொரு நேரத்தையும் நல்ல பொழுதாகப் பாராட்டிக் கொள்கிறோம். புதிய இடம், புதிய நபர்கள் எங்கு சென்றாலும் பாராட்டும் பழக்கத்தை விடாமல் கடைப்பிடியுங்கள். மலையும் உங்கள் முன் மண்டியிடும்.

பிறரை நாம் வாழ்த்தும் போது எமது மனம் மிருதுவாகிறது. கேட்கும் இதயம் குளிர்ந்து போகிறது. ஏதோ விசேட நாட்களுக்குத்தான் வாழ்த்துக்கள் என்றிருக்க முடியுமா? ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு கணமும் வாழ்த்த வேண்டும். மனதிற்குள் எந்த நேரமும் வாழ்த்து அலைகளைப் புறப்பட விடுங்கள். உங்கள் எதிரிகளைக் கூட அந்த வாழ்த்து அலைகள் வசப்படுத்தும். உங்களையே நீங்கள் வாழ்த்திக் கொள்ளுங்கள். ஒவ்வொரு கணமும், வாழ்த்திக் கொண்டே வாழ்வதில் பேரானந்தம் உள்ளது. வாழ்த்தப்படுவருக்கு ஒரு மடங்கு. வாழ்த்துபவருக்கு பல மடங்கு பலன் உண்டு.

அருட். சகோ. றோமலா அன்ரனி
திருச்சிலுவைக் கன்னியர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகமம் பிறந்த கதை

அருட்பணி போல் றொபின்சன்

இத்தனை பெரிதான காலங்கள் - கடிணங்கள் - கட்டாயக் கண்டணங்களுக்குள்ளாக கடந்து வந்தது தான் இந்தக் காதல் களஞ்சியம் “திரு விவிலியம்” (ஆங்கில மொழியில் பைபிள் என்றழைக்கப்படுகிறது.) பலநூறு ஆண்டுகளையும் கடந்து இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நீடித்து நிற்கும் உண்மையான அன்புறவின் வரலாற்றுக் கதை.

இந்த வரலாற்றுக் கதையில்
இன்பம் உண்டு
துன்பம் உண்டு
சண்டைகள் உண்டு
சமாதானம் உண்டு
பிரிவுகள் உண்டு
ஒப்புரவுகள் உண்டு
தவறுகள் உண்டு அவற்றிற்கு
மன்னிப்பு உண்டு
நண்பன் - பகைவன் -
துரோகம் - பிரமாணிக்கம்

இப்படி பலதும் கலந்துள்ளது. இவைகள் தான் உவமைகளாய் உண்மைகளாய் கற்பனைகளாய் காவியங்களாய் ஜெபங்களாய் திருப்பாடல்களாய் பழமொழிகளாய் பிரசங்கங்களாய் இறை மனித அன்புறவை வெளிப்படுத்தும் ஆழமான பரிசுத்த வேத நூலாய் நமக்கு தரப்பட்டுள்ளது.

முன்பொரு காலத்தில் நம்மவர்கள் நம்மியிருந்தது போல எல்லாம் முற்றுப் பெற்ற நிலையில் மூடப்பட்ட நிலையில் இந்த வேதாகமம் நமக்கு தரப்படவில்லை மாறாக இந்த நூற்களஞ்சியம் இஸ்ரவேலரின் வரலாற்றுப் பாதையில் பல காலகட்டங்களில் வெவ்வேறு இடங்களில் பல வித்தியாசமான அனுபவங்களுடன் வாழ்ந்த பல வேறுபட்ட மனித ஆசிரியர்களால் அவரவர் வாழ்ந்த காலத்துக்கும் இடத்துக்கும் பொருத்தமான இலக்கிய நடைகளில் எழுதப்பட்டது தான் இந்த 73 (இணைத் திருமுகங்கள் - Deutro - canonical இல்லாமல் 66) நூல்கள் அடங்கிய ‘திருவிவிலியம்’

இந்தியா ஒரிசாவில் ஆயிரம் திருவிவிலியம் எரிக்கப்பட்டாலும் பாக்கிஸ்தான் கராட்சியில் கண்ணில்பட்ட பைபிளை எல்லாம் எரிப்போம் என்று பலர் செயற்பட்டாலும் இந்த வேதநூல் அல்லது அதன் சிற்றெழுத்து கூட அழியவே அழியாது....!!! இதை நம் ஆண்டவர் இயேசு மாற்கு நற்செய்தியில் (13:31) சொல்லியிருப்பதை நாம் வாசிக்க முடிகிறது.

**‘விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா’ (மாற் 13:31)**

ஒரு சின்ன வரலாற்று உதாரணம் சொல்கிறேன் “முகம்மது எத்திப் எனும் ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் சாக்கடலின் (DEAD SEA) வடக்குப் பகுதியில் அமைந்துள்ள கும்ரான் (Qumran) பகுதிகளில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். கும்ரான் எனும் இப்பகுதி ஜெரிக்கோவிலிருந்து (Jericho) 12 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ள சிறு மலைப்பகுதி தவறிப் போன ஆட்டைத் தேடிச்சென்ற முகமது போகும் வழியில் கற்களை பொறுக்கி அங்கிருந்த சிறு மலைப் பகுதிகளில் விளையாட்டாய் வீசி எறிந்து கொண்டே போனான்.

எறிந்த கற்களுக்குள் சில மலைப்பகுதியில் அமைந்திருந்த குகை ஒன்றுக்குள் விழுந்தது அப்போது ஒருபானையை கல்லால் அடித்தால் எழும் ஒசை அக்குகைக்குள் இருந்து வந்ததை சிறுவன் முகம்மது உணர்கின்றான் ஆர்வமும் பயமும் கலந்தே குகைக்குள் நுழைந்து பார்த்தான் அங்கு சில ஜாடிகளும் அதற்குள் பல கையேடுகளும் இருந்ததைக் கண்டான். உடனேயே அவற்றுள் சிலவற்றை எடுத்து எரித்து வெளிச்சம் உண்டாக்கி தங்கள் ஆடுகளை இரவில் காவல் காத்தார்கள். பின்பு அருகே இருந்த சிலரிடம் போய் முகம்மது நடந்ததை சொன்னான். ஆர்வத்தோடு வந்து பார்த்தவர்கள் ஆரம்பத்தில் அந்தக் குகைகளுக்குள் இருந்து 16 ஜாடிகள் அதற்குள் பல நூறு விவிலியக்கையேடுகள் (Manuscripts) இருந்ததைக் கண்டார்கள். அவைகள் விவிலியக் கையேடுகள் என்று அறியாத நிலையில் ஆரம்பத்தில் அதை எடுத்தவர்கள் செருப்புத் தைக்கும் தொழிலாளிகளுக்கு அதை விற்று விட்டனர். பின்பு அதே காலப்பகுதியில், குறிப்பாய் 1947ம் ஆண்டளவில் தொல்பொருள் மற்றும் விவிலிய ஆராய்ச்சியாளர்களின் முயற்சியால் அந்த ஜாடிகளுக்குள் இருந்தவைகள் அனைத்துமே விவிலிய கையேடுகள் என கண்டறியப்பட்டன. அது மாத்திரமல்ல - என்ன ஆச்சரியம் என்றால் இவைகள் எல்லாமே கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலத்து விவிலிய கருத்துக்கள், விவிலிய ஏடுகள் என்றும் உறுதி செய்யப்பட்டது. குறிப்பாய் கி.மு 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த விவிலிய ஏடுகள் என உறுதி செய்யப்பட்டன.

தொடரும்...

# திருகோணமலை மறைமானிலச் செய்திகள்

## திருகோணமலை மறைமாவட்டத்தில் டொமினிக்கன் சபை அருட்சகோதரிகள் (MALTA)

30.08.2014 அன்று காலை ஆண்டாங்குளம் அன்னைவேளாங்கண்ணி கோயிலுக்கு அருகாமையில் டொமினிக்கன்சபை அருட்சகோதரிகளுக்காக இல்லம் எமது மறைமாவட்ட ஆயர் அதி.வந்.கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களினால் ஆசீர்வதிக்கப்பட்டு தொடங்கியது. குருக்கள், அருட்சகோதர சகோதரிகள் கலந்து கொண்டனர். தற்போது மூன்று அருட்சகோதரிகள் உள்ளனர். இவர்கள் சகோதரமொழி பேசுபவர்களாவர். இவர்களது பணி பங்குப்பணியும், ஆசிரியப்பணியுமாகும். இவர்களில் இருவர் ஆசிரியராவர்.

## தேசிய ரீதியிலான விவிலிய அறிவுப் போட்டி முடிவுகள் – 2014

தேசிய கிறீஸ்தவ மத அலுவல்கள் அமைச்சும், கொழும்பு மருதானை தூய சூசையப்பர் கல்லூரியும் இணைந்து நடாத்திய தேசிய விவிலிய அறிவுப் போட்டியில் திருகோணமலை மறைமாவட்டம் பெற்ற இடங்கள் விபரங்கள் பின்வருமாறு.



### தமிழ்ப் பிரிவு

**கீழ்பிரிவு (தரம் 6,7,8,9)**

2ம் இடம் பாலையூற்றுப் பங்கு போட்டியாளர்கள் பெறுகின்றார்கள்.
3ம் இடம் குவாடலூப்பே (பள்ளத்தோட்டப்)பங்கு போட்டியாளர் பெறுகின்றார்கள்.

**மத்திய பிரிவு (தரம் 10,11)**

1ம் இடம் பாலையூற்றுப் பங்கு போட்டியாளர்கள் பெறுகின்றார்கள்.





### அதி கூடிய புள்ளிகளைப் பெற்று தங்கப்பதக்கங்களைப் பெற்றவர்கள் விபரம்

**கீழ்பிரிவு (தரம் 6,7,8,9)**

செல்வன் சில்வஸ்டர் யதுஷன் பாலையூற்றுப் பங்கு
செல்வி ஜெயபாலன் குளோரியா பாலையூற்றுப் பங்கு

**மத்திய பிரிவு (தரம் 10,11)**

செல்வி அல்பிரட் ஸ்ரெவ்யா பாலையூற்றுப் பங்கு

**மேல் பிரிவு (தரம் 12,13)**

செல்வி துளசிநாதன் மின்சியா குவாடலூப்பே(செல்வநாயகபுர) பங்கு





## சாம்பல்தீவுப் பங்கிற்கு புதிய பங்குத்தந்தை

சாம்பல்தீவு தூய திருமுழுக்குயோவான் ஆலய புதிய பங்குத்தந்தை அருட்பணி அ.பி. லொசிங்டன் அ.ம.தி அவர்களை வரவேற்கின்றோம். இவர் நெடுந்தீவை பூர்வீகமாகவும் யாழ்பாணம், பலாலியை வசிப்பிடமாகவும் கொண்டவர். 1992ம் ஆண்டு யூலை மாதம் 28ம் திகதி குருவாக திரு நிலைப்படுத்தப்பட்டார். 1992ம் ஆண்டு முதல் அவர் ஆற்றிய பணிகளாவன:

1992 - 1995 மறையுரைப்பணி + நிதிப்பொறுப்பாளர் தொடர்பகம் யாழ்பாணம்
1995 - 1996 உதவிப் பங்குத்தந்தை ஒமந்தை மன்னார் மறைமாவட்டம்
1996 - 1997 பங்குத்தந்தை நானாட்டான் மன்னார் மறைமாவட்டம்
1997 - 1999 இயூஜின் டீ மெசனட் இல்ல இயக்குனர் மன்னார் மறைமாவட்டம்
1999 - 2002 தூய வளனார் சிறிய குருமட இயக்குனர் யாழ்பாணம்
2004 - 2004 மறையுரைப்பணி அமதி அகம் வவுனியா
2004 - 2005 உருவாக்கப்பணி பங்களாதேஷ்
2005 - 2008 “அன்பகம்” சிறுவர்இல்ல இயக்குனர் முழங்காவில்
2009 - 2010 “சங்கமம்” இயக்குனர் யாழ்பாணம்
2010 - 2011 மேற்படிப்பு அயர்லாந்து
2011 - 2012 “அன்பகம்” சிறுவர் இல்ல இயக்குனர் முழங்காவில்
2012 - 2014 பங்குத்தந்தை ஹப்புத்தளை பதுளை மறைமாவட்டம்
2014 - செப்ரம்பர் 7ம் திகதி முதல் பங்குத்தந்தை சாம்பல்தீவு திருகோணமலை மறைமாவட்டம்.

**இவரது பணிவாழ்விற்காக செபிப்போம்.**

## அறிவித்தல்

*உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்*

### கட்டணம்

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | *1/4 பக்கம் – 2500.00* |
| | *1/2 பக்கம் – 5000.00* |
| கலர் | *1/4 பக்கம் – 3750.00* |
| | *1/2 பக்கம் – 7500.00* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைபொருள் உணர்த்தும் செபமாலை அன்னை திருவிழா ஐப்பசித் திங்கள் 7ம் நாள்



அருட்பணி ஆஞ்சலோ பொன்னையா இ.ச

அருள் நிறைந்தவளே வாழ்க, ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் **(லூக் 1:28)** என்ற வேதவசனம் அன்னை மரியாளின் அகத் தூய்மையையும் அதனால் விளைந்த இறைத் தூய்மையையும் நம் அனைவரையும் பிரமிக்க வைக்கின்றது. அருள்வரங்களை ஆயிரம் ஆயிரமாய் அள்ளி வழங்கும் அண்ணல் இயேசுவிடம் சிலர் வளமான வாழ்க்கையைக் கேட்கின்றனர். சிலர் பெயர் புகழைக் கேட்கின்றனர். இன்னும் சிலர் அறிவு, ஆற்றல், பெயர், புகழ், அழகு அந்தஸ்து அதிகாரம் போன்றவற்றை கேட்டு நிற்கிறாள். ஆனால் அன்னை மரியாள் கடவுளை மட்டும் கேட்டு நின்றாள். வார்த்தையினால் மட்டுமல்ல வாழ்க்கை முழுவதும் மனத் தாழ்ச்சியையும், உளத் தூய்மையையும், அக வளமையையும், புற ஏழ்மையையும், கன்னிமையையும், கீழ்படிவும் நிறைந்த வாழ்வைக் கேட்டு நிற்கின்றாள். வானகத்தூதர் வழியாக இறைவன், மரியாள் இறை மகனின் தாயாக மாற அழைப்பு விடுக்கின்றார். "உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும் என்ற வார்த்தைகள் வழியாக இறைவனைத் தாங்கும் வரம் பெறுகிறாள். மங்கள வார்த்தை நிகழ்வில் இருந்து விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் வரை இறைச்சித்தத்தையே தனது வாழ்வின் தாரக மந்திரமாக ஏற்று வாழ்ந்தவள் நம் அன்னை. எனவே தான் எல்லாப் புனிதர்களையும்விட மேலான நிலைக்கு உயர்த்தப் பெறுகிறாள்.

## செபமாலை அன்னை



அன்னை மரியாளைப் போன்று எண்ணற்ற பெயர்களைக் கொண்ட வேறெந்த ஒரு புனிதரும் இல்லை என்றே சொல்லலாம். அன்னை மரியாளின் மீட்புத் திட்ட செயற்பாடுகளின் அடிப்படையில், அவளது பண்புகளின் அடிப்படையில் காட்சி கொடுத்த இடங்களின் பெயர்களின் அடிப்படையில் என்று அன்னை மரியாளுக்கு எண்ணற்ற பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவரது பெயர்களில் ஒன்று செபமாலை அன்னை அல்லது செபமாலை இராக்கினி என்பதாகும். இப் பெயர் மேலே குறிப்பிட்டுள்ள மூன்று வகைகளுள் அடங்காதத் தனிப் பெயராக அமைந்துள்ளது. செபமாலை சங்கிலி, மரியாளின் பக்தி முயற்சிகளுள் மிகமுக்கியமானது செபமாலை என்று சொல்லலாம். செபமாலை அஞ்சலி அல்லது செபமாலை பக்தி முயற்சிக்கு நீண்ட நெடியதொரு வரலாறு உள்ளது. திருச்சபையின் தொடக்க நூற்றாண்டுகளில் துறவற சபைகள் தொடங்கப்பட்ட பொழுது திருப்பலி, திருஅருட்சாதன கொண்டாட்டங்கள் போன்று திருவழிபாட்டு நிகழ்வுகளோடு சில இணை வழிபாடுகளும் **(Para Liturgy)** துறவிகளின் அன்றாட வாழ்க்கையில் காணப்பட்டன. துறவற இல்லங்களில் காலை, பகல், மாலை, இரவு, செபங்கள் 150 திருப்பாக்களின் பல்வேறு பகுதிகளைச் செபிப்பதாக அமைந்திருந்தன. கல்வியறிவு பெற்றிருந்த குருத்துவ நிலைத் துறவிகளோடு படிப்பறிவற்ற பொதுநிலைத் துறவிகள் (துறவற சகோதரர்கள்) துறவற இல்லங்களில் சேர்ந்த பொழுது திருப்பாக்களைச் செபிக்கும் பாணியில் மீண்டும் மீண்டும் கர்த்தர் கற்பித்த செபத்தைச் சொல்லும் வழக்கத்தை ஏற்படுத்தினர். அவர்கள் சரியாக எண்ணுவதற்கு உதவும் வகையில் நூறு மணிகள் தொடுக்கப்பட்ட கயிறுகள் கொடுக்கப்பட்டன.

12ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அன்னை மரியாளின் பக்தி முயற்சிகள் அதிகரிக்கத் தொடங்கின. 150 கர்த்தர் கற்பித்த செபத்திற்குப் பதிலாக 150 அருள் நிறைந்த மந்திரம் சொல்லப்பட்டது. ஒவ்வொரு திருப்பாவிற்கும் இடையில் சொல்லப்பட்டது போல ஒவ்வொரு இடைவெளியிலும் தந்தை மகன் தூய ஆவி ஆகிய மூவொரு கடவுளின் ஆராதனை சொல்லப்பட்டது. 12ம் நூற்றாண்டில் தொடங்கிய இப் பக்தி முயற்சி 16ம் நூற்றாண்டில் இன்னும் அதிகமாகப்பரவ ஆரம்பித்தது. இதற்குக் காரணமாக அமைந்தவர் புனித சுவாமிநாதன் ஆவார். இவர் மிகப் பெரிய திருவுரையாளர். இவர் தன்னுடைய மறை உரைகளை மூன்று பகுதிகளாக பிரித்துக் கொண்டார். அவைகள் **ஆண்டவர் வாழ்வில் இடம்பெற்ற மூன்று நிகழ்வுகள். ஆண்டவர் இயேசுவின் மானிட உடலேற்பு நிகழ்வு அவரது பாடுகள்- உயிர்ப்பு ஆகியவையாகும்.** அவரது நீண்ட மறையுரைத் தொடரில் மக்களுக்கு ஒரு சிறு மாற்றத்தைக் கொடுக்கவும் இறையருளை பெறுவதற்கு அவர் கையாண்ட யுக்தியே செபமாலைப் பக்தியாகும். 150 மணிச்செபத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு மறைத் தொடருக்கும் மூன்றுமுறை 50 அருள்நிறை மந்திரத்தை செபிக்க வைத்தார் இவ் வழக்கமே பிற்காலத்தில் **மகிழ்ச்சி துக்கம்,மகிமை மறைபொருளைக்** கொண்ட செபமாலை பக்தி முயற்சியாக உருவெடுத்தது. இந்த 50 மணிகளோடு கிறிஸ்தவ வாழ்வில் அடிப்படைப் புண்ணியங்களான விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றைக் குறிக்க 3 அருள்நிறை மந்திரங்கள் சேர்த்துகொள்ளப்பட்டன. இவ்வாறுதான் 53 மணிகளைத் தாங்கிய செப மாலை உருவாக்கப்பட்டு அதன்நுனியில் பாடுபட்ட சுருபத்தைத் தொட்டு விசுவாசப் பிரமாணம் சொல்லி செபமாலையைத் தொடங்கும் வழக்கம் ஏற்பட்டது. இவ்வழக்கமே இன்றுவரை தொடர்கிறது. 16. 02. 2002ல் மறைந்த திருத்தந்தை புனித 2ம் அருள்சின்னப்பர் **"கன்னிமரியாளின் செபமாலை"** என்னும் திருத்தூது மடலில் புதிய ஒளியின் மறைபொருள் ஒன்றை அறிமுகம் செய்தார். 16வது நூற்றாண்டில் தொடங்கி கடந்த 5ம் நூற்றாண்டுகளுக்கு மேலாக கத்தோலிக்கத் திருச்சபையில் சிறந்த இடம் வகிக்கும் இப் பக்திமுயற்சி திருப்பலிக்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது என்றால் மிகையாகாது செபமாலை பக்தியின் மூலம் ஐப்பசித் திங்கள் 7ம் நாள் லெபன்றோவுக்கு அருகில் கிறிஸ்தவர்களது துருக்கியரின் மேல் மாபெரும் வெற்றி பெற்றனர். அதன் நினைவாக இந்நாளில் இச் செபமாலை அன்னைத் திருவிழா கொண்டாடப்படுகிறது. செபமாலை பக்தியின் திருத்தந்தை என அழைக்கப்படும் திருத்தந்தை 13ம் சிங்கராயர் இவ்வாறு கூறுகிறார். "செபமாலைப் பக்தி முயற்சியில். நாம் பங்கேற்கும் போது மரியன்னையின் அரவணைப்பில் நாம் இருக்கிறோம் நம் தாய் மழலைகளுக்குக் கற்றுதருவது போல ஒவ்வொரு தேவ இரகசியத்தையும் நமக்கு விளக்கிச் சொல்கிறார்". செபமாலையை நாம் பக்தியுடன் செபிப்பதன் மூலம் இயேசு ஆண்டவரின் மறை பொருள்களில் நாமும் முழுமையாகப் பங்கேற்கிறோம் அன்னை மரியாளின் துணையால் நாமும் மீட்புத் திட்டத்தில் சரியான முறையில் பங்குபெறவும் நமக்கு உதவும் சிறந்த கருவியே செபமாலை எனக் கூறியுள்ளார் திருத்தந்தை புனித 2ம்அருள்சின்னப்பர். திருச்சபையின் பக்தி முயற்சிகளிலும் குடும்ப செபங்களிலும் தவறாது இடம் பெறவேண்டியது செபமாலைச் செபம் இன்றைய ஆரவாரம் மிக்கவேகமான வாழ்கைச் சூழலிலே ஆரவாரத்தை அடக்கி உள்வெளி அமைதியை புலனையும் அறிவையும் ஆற்றுப்படுத்தி உள்நோக்கு ஆற்றலை (Introspection) கற்றுத்தரும் சக்தி படைத்தது செபமாலை வெளிச் சக்திகளால் இயக்கப் பெறும் இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஆழ்ந்த உள் அமைதிக்கு இட்டுச் செல்லும் அருமருந்தாக செபமாலைச் செபம் அமைந்துள்ளது. செபமாலை சொல்வோம் செபமாலை இராக்கினியின் அருள்பெறுவோம்

## மரியன்னை மூலம் இயேசுவிடம் செல்வோம்



அருட்பணி சீ.ஜெயரெட்ணம்

**செபமாலை:** அன்னையின் பக்தி முயற்சிகளில் முக்கியமான ஒரு பகுதி செபமாலை ஆகும். குடும்பமாகவும் தனிப்பட்டரீதியிலும் நாம் செபமாலையைத் தியானிக்கின்றோம். நேரம் என்பது சில வேளைகளில் எமக்கு ஒரு பிரச்சனையென நினைக்கிறோம். எனினும் செபமாலையைத் தியானிக்க நேரம் ஒரு தடையல்ல. இலகுவாகச் சொல்லக் கூடிய முறையில் அமைந்த செபம் என்பதால் எந்நேரத்திலும் செபமாலையைத் தியானிக்க முடியும். ஒவ்வொரு குடும்பமும் தினமும் 30 நிமிடங்களையாவது ஒதுக்கி செபமாலை மற்றும் அன்னையின் மன்றாட்டு மாலையைச் செபிப்பது அக்குடும்பம் சிதறாமல் இருக்க உதவி செய்யும். ஒவ்வொரு காரணிக்கத்தையும் பகிர்ந்து செபமாலையை ஒரு அமைவாக குடும்பத்தில் ஒழுங்காக அது ஒரு செய்யும்.

தனிப்பட்ட முயற்சியாக எவ்வேளையிலும் ஒருவர் செபமாலையைத் தியானிக்கலாம். பயணிக்கும் போது யாருக்குமே இடையூறின்றி மனதில் செபமாலையைத் தியானிக்கலாம். தன் வேலைத் தளத்தில் கிடைக்கும் சிறு ஓய்வு நேரத்திலும் இதனைத் தியானிக்கலாம். படுக்கையில் நித்திரை செய்கையில் கூட இதனைப் பக்தியோடு செய்யலாம். தன் தோட்டத்தில் வேலை செய்யும் போதும் கூட உள்ளன்போடும் பக்தியோடும் இதனைச் செபிக்கலாம். தினமும் செபமாலை செபிப்பது என்பது இன்று அருகி வரும் பகதி முயற்சியாகும். பெற்றோர் தினமும் அக்கறை எடுத்து வழிகாட்டி தலைமையேற்றும் செபமாலைத் தியானிக்கிற போது அது தம் பிள்ளைகளுக்கு அவர்கள் கொடுக்கின்ற சத்தான ஆன்மீக உணவாக அமையும். செபமாலை மூலம் தம் வாழ்வையும் விசுவாசத்தையும் சிதறவிடாமல் பாதுகாக்க முடியும் என்ற அனுபவ உண்மையை உணர்ந்தோர் ஒருபோதும் செபமாலையைக் கைவிட்டதில்லை. தினமும் எம் பயணங்களில் எம் துணையாகச் செப மாலையைத் தம்முடன் எடுத்துச் செல்ல எம் சிறுவர்களைத் தயார்படுத்துவது எம் கடமையாகும். சிலுவை எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொது அடையாளம். செபமாலை எல்லாக் கத்தோலிக்கருக்கும் சிறப்பு அடையாளமாகும். எனவே அதனைக் காப்போம்.

**சனிக்கிழமை அன்னையின் நாள்:** ஞாயிற்றுக்கிழமை எவ்வாறு உயிர்ப்பின் நாளாகவும் இயேசுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நாளாகவும் இருக்கிறதோ அவ்வாறே சனிக்கிழமை அன்னைக்கென அர்ப்பணிக்கப்பட்ட நாளாக இருக்கின்றது. அன்னையின் பெயரில் அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்களிலும் தூய லூர்து அன்னையின் கெபி அமைந்துள்ள இடங்களிலும் சனிக்கிழமைகளில் அன்னையின் பெயரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதும் செபமாலை செபிப்பதும் பாரம்பரியங்களாகும். பல இடங்களில் இதுவே அம்மக்களின் விசுவாசத்தைப் பாதுகாக்க உதவி செய்தன என்பதையும் மறக்க முடியாது. எனவே சனிக்கிழமைகளில் இயன்றவரை அன்னையின் பெயரில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கெடுப்பதும் அன்னையின் கெபியைத் தரிசித்துச் செல்வதும் பயனுள்ள பக்தி முயற்சிகளாகும்.

**அன்னையின் திருச்சுரூபம் படங்கள்:** வீடுகளில் தேவஅன்னையை அரசியாக ஏற்று அன்னையின் திருச்சுரூபத்தையோ படங்களையோ அணி செய்வது கத்தோலிக்கரது பாரம்பரியம். இவற்றைப் பார்க்கின்ற ஒவ்வொரு நேரத்திலும் அவரது தாயன்பும் பராமரிப்பும் எம் மனதுக்கு ஆறுதல் தருகின்றன. சிறப்பாக எம் துன்ப துயரங்களின்போது அன்னையின் பாதத்திலே தான் நாம் கண்ணீருடன் வேண்டுகிறோம். தாயும் எம் கண்ணீரைத் துடைக்கத்தவறுவ தேயில்லை. எம் பிள்ளைகளை காலையில் எழும்பும் போதே அன்னையின் திருச் சுருபத்திற்கு மலர்களை அர்ப்பணிக்கவும் விளக்குக் கொழுத்தி சிறிது நேரம் செபிக்கத் தூண்டுவது பெற்றோரின் கடமையாகும்.

தொடரும்.................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 02
## தூய மத்தேயு நற்செய்தி 6-10

**அன்பார்ந்த வாசகர்களே**

"விடுபட்ட எழுத்துப்புதிர்" போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும். 1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு150/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 02. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**
**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 10. 2014**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | ■ | இ | | | | | | ■ | சொ |
| | பா | ■ | ■ | இ | | கை | நு | | |
| | | வ | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | ■ |
| | | ■ | வா | | | பெ | | | வா |
| | ■ | சி | | | | | | | |
| | அ | | | | | | ■ | இ | |
| ■ | ம | | | | கு | | ■ | ■ | |
| ந | | | | | ■ | | | | வ |

1. எ..........சரிக்கையாய் 2. இருங்கள்
3. இ.......க்கமான 4. வாயி.......ன் 5. வ........ழியே
6. நு.......யுங்கள் 7. வா.....த்....... 8. ம........டும்
9. சொ........லும் 10. ந........பிக்கை
11. கு........றியவ........களே 12. பா........களையே
13. அ........க்க 14. வ......தேன் 15. சிறு.......
16. இ.....க்கவி.......லை 17. கை.......மாறு

## மறைக்கல்வி கற்போம் - 02

01. ஆதாம் ஏவாளுக்கு கடவுள் கொடுத்த ஆடை?
**தோல் ஆடை**
02. கடவுள் மண்ணை ஏன் சபித்தார்?
**மனிதரின் பாவத்தால்**
03. ஆதாமின் முதல் குழந்தை காயினின் தொழில்?
**நிலத்தை பண்படுத்தும் தொழில்**
04. ஆபேலின் தொழில்?
**ஆடு மேய்க்கும் தொழில்**
05. காயின் தன் சகோதரரை என்ன செய்தார்?
**கொன்றார்**
06. ஏன் காயின் ஆபேலை கொன்றான்?
**கடவுள் காயினின் காணிக்கையை கண்ணோக்கவில்லை என்பதால்**
07. கடவுள் காயினிடம் உன் சகோதரன் ஆபேல் எங்கே என்பதற்கு அவன் கூறியது என்ன ?
**எனக்கு தெரியாது நான் என்ன என் சகோதரனுக்கு காவலாளியா**
08. காயினைக் கண்டுபிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க கடவுள் என்ன செய்தார்?
**அவன் மேல் ஓர் அடையாளம் இட்டார்**
09. காயினின் மகன் யார்?
**ஏனோக்**
10. காயின் நிறுவிய நகரத்தின் பெயர்?
**தன் மகனின் பெயர் 'ஏனோக்'**
11. ஆதாம் எத்தனை வருடங்கள் உயிர் வாழ்ந்தார் ?
**930 வருடங்கள்**
12. பழைய ஏற்பாடு என்றால் என்ன ?
**கிறிஸ்து வருவதற்கு முன் எழுதப்பட்ட விவிலிய நூல்கள்**
13. பழைய ஏற்பாட்டின் முதல் நூல் எது ?
**தொடக்க நூல்**
14. பழைய ஏற்பாட்டின் இறுதி நூல் எது ?
**2 மக்கபேயர்**
15. பழைய ஏற்பாட்டு நூல்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டது ?
**பெந்ததேயுக் (Pentateuch)**
**வரலாற்று நூல்கள்**
**இறைவாக்கினர் நூல்கள்**
**ஞானாகம நூல்கள்**

## ஹாய் குட்டீஸ்
### திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 09
### லேவியர் நூல் அதிகாரம் 01 ~ 13 வரை

01. மோசே, ஆரோனின் சிற்றப்பனின்பெயர் என்ன?
விடை:...............................................
02. நன்றிக் கடனாக செலுத்தும் நல்லுறவுப் பலியின் இறைச்சியை எப்படி உண்ண வேண்டும்?
விடை:...............................................
03. குரு அறியாமல் செய்த பாவம் போக்கும் பலியாக எதை செலுத்த வேண்டும்?
விடை:...............................................
04. ஆரோனின் புதல்வர்கள் பெயர் என்ன?
விடை:...............................................
05. ஒருவர் நேர்ச்சை எரிபலி எனில் அவர் எதைப் படைக்க வேண்டும்?
விடை:...............................................
06. மோசே எதனைத் தேடிப் பார்த்தார்?
விடை:...............................................
07. மக்கள்கூட்டமைப்பு முழுவதையும் ........................ நுழைவாயிலின் முன் கூட்டிவரச் செய்.
08. ஆண்டவருக்குச் செலுத்தும் உணவுப் படையல் எவ்வாறு இருக்கக் கூடாது?
விடை:...............................................
09. நேர்ச்சை நல்லுறவுப்பலி செலுத்தும் ஆடு எப்படி இருக்க வேண்டும்?
விடை:...............................................
10. தம் குற்றப்பழியை அகற்ற ஆட்டுக்குட்டி கொண்டுவர இயலாதவர் வேறு எதைக் கொண்டுவர வேண்டும்?
விடை:...............................................
11. குற்றப்பழி நீக்கும் பலி எந்த இடத்தில் அடிக்கப்பட வேண்டும்?
விடை:...............................................
12. ஆண் குழந்தை பிறந்த எத்தனையாவது நாள் விருத்த சேதனம் செய்ய வேண்டும்?
விடை:...............................................
13. ஆண்டவருக்கு எதனை நெருப்புப் பலியாக செலுத்தக்கூடாது?
விடை:...............................................
14. ஆரோனும் புதல்வர்களும் எத்தனை நாட்கள் சந்திப்புக்கூடார நுழைவாயிலில் தங்கினர்?
விடை:...............................................
15. இஸ்ரயேல் பாவம் போக்கும் பலியாக எதனை ஒப்புக் கொடுக்க வேண்டும்?
விடை:...............................................

## ஹாய் குட்டீஸ்
### திருவிவிலிய புதிர்போட்டி எண் ~ 07
### விடுதலைப்பயண நூல் அதிகாரம் 21 ~ 30
### விடைகள்

01. ஆறு நாள்கள் ( 23 : 12 )
02. கொல்லப்பட்ட ( 21 : 15 )
03. சீனாய் மலை ( 24 : 16 )
04. பலிபீடத்தின் மேல் ( 24 : 6 )
05. பசும் பொன்னால் ( 25 : 17 )
06. பதினொன்றரை கிராம் ( 30 : 13 )அடிக்குறிப்பு
07. யோசுவா ( 24 : 13 )
08. பழிக்காதே,சபிக்காதே ( 22 : 28)
09. ஊரிமையும், தும்மியையும் ( 28 : 30 )
10. நிலம், கருஞ்சிவப்பு ( 26 : 31 )
11. செம்மறியாடு ( 29 : 18 )
12. 5 முழம், 5 முழம், 3 முழம் ( 27 : 1 )
13. நீதியை திரித்து விடாதே ( 23 : 6 )
14. மூன்று முறை ( 23 : 14 )
15. வெள்ளைப் போளம்,குங்கிலியம், கெல்பான்,பிசின் (30 : 34 )

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**
**பங்குபற்றியவர்கள் - 25 பேர்**
**சரியான விடையளித்தோர் - 05 பேர்**

**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31.10.2014**

**1ம் பரிசு 500/=**
செல்வி தணிகாசலம் அபிஷா
6ம் வட்டாரம் சாம்பல்தீவு,
திருகோணமலை


**2ம் பரிசு 300/=**
செல்வி ஜெ. நிருஷா
இல: 25/28 வேளாங்கண்ணி வீதி
பள்ளத்தோட்டம், திருகோணமலை

**3ம் பரிசு 150/=**
செல்வன் த. அனோஷன் பேட்றம்
6ம் வட்டாரம் சாம்பல்தீவு,
திருகோணமலை

**பாராட்டுக்குரியவர்கள் :**

- செல்வி ஜெ. நிருஷா
இல: 18 வேளாங்கண்ணி வீதி
பள்ளத்தோட்டம், திருகோணமலை
- செல்வி சசிகுமார் கன்சிஹா சியேன்
3ம் வட்டாரம் , நிலாவெளி

## வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிக்கரம் - 2014



திருகோணமலை மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரால் தேசிய இளைஞர் ஞாயிறு தினத்தினை அர்த்தமுள்ள வகையில் சிறப்பிக்கும் முகமாக தற்போது நிலவிவருகின்ற வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு உதவும் வகையில் அவர்களுக்கு தேவையான உலர் உணவு மற்றும் குடிநீர்ப் போத்தல்கள் பங்கு மக்களின் உதவியுடன் சேகரிக்கப்பட்டு வெருகல் பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களான கருக்காமுனை, இலங்கைத் துறை, வட்டவன், போன்ற இடங்களில் வாழும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 25.09.2014 அன்று காலை மறைமாவட்ட இளைஞர் ஒன்றிய இயக்குனர் மற்றும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள் சென்று பிரதேச செயலாளர் மூலம் வழங்கி வைத்தனர்.

கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்
திருகோணமலைப் பிராந்தியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனரின் 22வது குருத்துவ நினைவு



கடந்த 16. 09. 2014 அன்று திருகோணமலை மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி என்.சி. அருள்வரதன் அவர்களின் 22வது குருத்துவ நினைவு நாள் திருப்பலி திருமறைக்கல்வி நிலையத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் எகெட்கரித்தாஸ் இயக்குனரும் பணியாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.



# 12வது குருத்துவ நினைவு நாள்.

எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி க.நிதிதாசன் அடிகளாரின் 12வது குருத்துவநிறைவினை 05.09.2014 அன்றுபணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் சிறப்பித்தார்கள். அன்றைய தினம் அருட்தந்தையர்களால் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தந்தையின் 12வருட பணிவாழ்வின் நினைவுகளை அருட்பணி போல் றொபின்சன் அடிகளார் எடுத்தியம்பினார். அதனைத் தொடர்ந்து அருட்தந்தைக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு, மேலும் அவர் பணிசிறக்க இறைவனைப் பிராத்திப்பதோடு, அன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைத்து அருட்தந்தையர்களுக்கும், அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**எகெட் கரித்தாஸ்**
**திருகோணமலை.**

## அகில இலங்கை வேதாகம வினாவிடை போட்டியில் பங்குபற்றி 1ம்,2ம்,3ம் இடங்களைப் பெற்றவர்களும் தங்கப் பதக்கங்களை பெற்றவர்களும்

கீழ்ப்பிரிவு (தரம்6,7,8,9)




கீழ்ப்பிரிவு (தரம்6,7,8,9)




மத்தியபிரிவு (தரம்10,11)




தங்கப் பதக்கங்களைப்




## 31ம் நாள் நினைவஞ்சலி 08.10.2014

"ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே
நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பிலி 1:21)

மலர்வு 2000 † 03 † 18



உதிர்வு 2014 † 09 † 08

"அவரது ஆன்மா ஆண்டவருக்கு ஏற்புடையதாய் இருந்தது
ஆண்டவர் அவரை விரைவில் எடுத்துக் கொண்டார்". (சா.ஞா 4:14)

**அமரர். செல்வன் விஜயகுமார் மனோஜ்**

கடவுளாள் தாயின் கருவில் உருவானாய்...
உன்னதரின் படைப்பில் உலகில் தோன்றினாய்...
இறைவார்த்தையின் தாகத்தால் உன் இதயத்தை நனைத்தாய்...
ஜெப ஆவியால் இயேசப்பா இயேசப்பா என்று ஜெபித்தாய்...
அறிவு திறமைகளால் கல்வியில் சிறந்து விளங்கினாய்...
இயேசு உன் பெயர் சொல்லி உன்னை அழைக்க...
மரியாளின் பிறந்த நாளிலே பரலோக ஐஸ்வரியத்தை
நீ சொந்தமாக்கிக் கொண்டாயடா ...!

"உமது திருவுளப்படியே என்னை நடத்துகின்றீர்!
முடிவில் மாட்சியோடு என்னை எடுத்துக் கொள்வீர்"(தி.பா 73 : 24)

உன் ஆன்மா நித்திய இளைப்பாறுதல் அடைய ஜெபிக்கின்றோம்.....!

விஜயகுமார் மனோஜின் மரணச் சடங்கிலும் திருப்பலியிலும் கலந்து ஜெபித்த மறைமாவட்ட ஆயர், குருக்கள், அருட்சகோதரிகள், பாலையூற்று பங்குத்தந்தையர்கள், மறையாசிரியர்கள், மறைக்கல்வி மாணவர்கள், இறைமக்கள், மட்டக்களப்பு மறைமாவட்ட தூயமரியாள் பேராலயம், இருதயபுரம், தன்னாமுனை, பங்குமக்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள்,அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: அருட்பணி இ. யூட்சர்வானந்தன்
பங்குத்தந்தை - உவர்மலை

# வெள்ளமணல் தூய ஆவியார் ஆலயம்



"ஆண்டவர் மனிதருக்குத் தந்துள்ள ஆவி ஒரு விளக்கு;
அது அவர்களின் உள்ளத்தில் இருப்பதையெல்லாம் ஆய்ந்தறியும்".
(நீதிமொழிகள் 20:27)

## ஆலய புனருத்தாரணம்

வெள்ளமணல் தூய ஆவியானவருக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதற்கு பின்வரும்செயல்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளோம். அவை:

1. ஆலயத்திற்கு மின்சாரம்
2. தண்ணீர் வசதிகள்
3. ஆலயத்திலுள்ள கல்வாரி புனரமைக்க போன்ற வேலைகளைச்

செய்யவிருப்பதால் உதவி செய்ய விரும்புவோர் பங்குத்தந்தையை தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: அருட்பணி ஜோர்ஜ் திசநாயக்கா
பங்குத்தந்தை
தூய அந்தோனியார் ஆலயம்,
சீனன்குடா,
திருகோணமலை.
தொலைபேசி இலக்கம் 026 2233303, 0777780317
Email : George Dissanayake <guvado@gmail.com>

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org